முருகப்பெருமான் துணை

**மகான் அதிபத்த நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.04.2024**, புதன்கிழமை

1. சரவணச் சுடரேற்றி அருளும்
   சற்குருவே ஆறுமுக அரங்கனே
   சரவணப் பெருமான் சக்தியாக
   சகலருக்கும் ஞானம் தந்தருளும்
2. அருளும் தேசிகனே உமைபோற்றி
   அறிவிப்பேன் துல்லிய ஆசிதனை
   வரமென குரோதி தகர்திங்கள்
   வல்லமைபட லாபதிகதி புந்திவாரம்
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 11ம் நாள், 24.04.2024, புதன்கிழமை)
3. வாரமதில் ஞானிகளை தொடர்ந்து
   வழங்குவோம் அறுபத்துமூன்று நாயன்மார்களும்
   சோரமிலா ஞானஉலகம் அமைய
   சுருதிபடி அதிபத்த நாயனாரும் உரைப்பேன்
4. உரைக்கவே சைவநெறி எனும்
   உயிர்க்கொலை நீக்கி வாழும்
   குறைவிலா இறைநெறி வழி
   குருவரங்கன் வழிகாட்டலில் மக்கள்வர
5. வருகவே வையகம் எங்கிலும்
   வள்ளலாய் சக்தி வெளிப்பட
   தருமத் தயவு சிந்தை பெருகி
   தானதருமம் எங்கும் நிரம்பி
6. நிரம்பியே பிறர் பசிபிணி விரட்டும்
   நிலவுலகில் தருமவான்களாக
   வரம்பிலா தரும சாலைகளும்
   வையகம் எங்கிலும் பெருகி
7. பெருகியே அரங்கன் விதைத்த
   பெருந்தர்மம் தானும் உலகின்
   வறுமை விரட்டி வளமாக்கும்
   வருங்காலம் இயற்கையே வியக்க

8. வியக்க மக்களிடை கருணை
வினவிட நிரம்பிச் சிறக்க
தயக்கமின்றி இயற்கை தானும்
தக்கபடி மும்மாரி பொழிந்து

9. பொழிந்துமே நீர்வளம் நிலவளம்
புகலுவேன் குன்றாத வண்ணம்
அழிவிலாச் சிறந்து நன்கு
அகிலம் எல்லாப் பாதுகாப்பும் அடையும்

10. அடையவே மக்களிடை தெளிவு
அன்பும் அறிவும் கலந்துயர
தடையற ஞான பலமுமாகி
தவசி அரங்கன் ஆசிபலத்தால்

11. ஆசிபலத்தால் முழுமை கிட்டி
அறிவிப்பேன் பிறவாப் பேறு
வாசிவசம் சகல இன்பமுமாகி
வையகத்தார் மேல்நிலை பெறநேரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–